## தமிழ்த்தேசிய விடுதலைப்போராட்டம் எதைநோக்கி?

# தீர்வை நோக்கிய பாதையில் இலங்கை அரசியல்

**வி.சிவலிங்கம்**

இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வை நோக்கிய பாதையில் திரும்பி இருப்பதாகத் தெரிகிறது. ஒரு புறத்தில் உக்கிரமான போரை நோக்கிய அணுகு முறையும், மறுபுறத்தில் அரசியல் தீர்வு பற்றிய வாதப் பிரதிவாதங்களும் எழுந்துள்ளன. இவ்விரு அணுகு முறைகளுக்கும் வலுவான நியாயங்கள் முன் வைக்கப் படுகின்றன. தற்போதைய முயற்சிகள் கடந்த காலம் போல செயலற்ற ஒன்றாக அமைந்து விடுமா அல்லது இம்முறையாவது உருப்படியான மாற்றம் ஏற்படுமா என்ற கேள்வி தொடர்ச்சியாகவே முன்வைக்கப்படுகின்றது. இருப்பினும், சமீபகால முயற்சிகளுக்கும் கடந்த கால அணுகுமுறைகளுக்கும் பாரிய வேறுபாடு இருப்பது மறுப்பதற்கில்லை. இதன் காரணமாகவே, இத்தடவை எதிர்பார்க்குமளவுக்கு தீர்வுகளை நோக்கிச் செல்லா விடினும் அதற்கான சில அத்திவாரங்கள் போடப்படும் சாயல்கள் தென்படுகின்றன.

இனப்பிரச்சினையின் நீண்ட காலத் தன்மையும், குறிப்பாக, ஆயுத வன்முறை அரசியல் போக்கில் ஏற்ப டுத்தி வரும் கடுமையான தாக்கங்களும் ஜனநாயக வழியிலான அரசியல் நடைமுறைகளுக்குப் பெரும் சவாலாகவே அமைகிறது. ஆயுத வன்முறையைக் கருவியாக்கி, அதன் மூலம் அரசியல் நிலைமைகளை மாற்றும் போக்கு ஜனநாயக வழிகளல்லாத பயங்கர வாத சக்திகளின் நெறியாக இருக்கின்றது. இவர்கள் மறைமுகமாகவே இயங்குகின்றனர். ஆனால், மக்க ளால் தெரிவு செய்யப்பட்ட தலைவர்களின் தீர்மா னங்கள் மிகவும் வெளிப்படையானதாகவும் விமர்சனத் துக்கு உட்படுத்தக் கூடியனவாகவும் இருப்பதால் அவற்றில் காணப்படும் குறைபாடுகளை விமர்சிப்பதற்கு ஜனநாயகம் வாய்ப்பை அளிக்கிறது. இங்கு இரண்டு அடிப்படை அம்சங்கள் நேரடியாக மோதுகின்றன. அதாவது, ஆயுத வன்முறையின் மூலம் அரசியல் செய்ப வர்கள் தீர்மானங்களை மேற்கொள்ளும் பொறி முறைகளும் அதற்கு எதிராகச் செயற்படுவதற்கான முடிவுகளை மேற்கொள்ளும் அரசின் பொறிமுறைகளும் முற்றிலும் வேறுபட்டவை. எனவே, இனப்பிரச்சினை தொடர்பாக சம்பந்தப்பட்டுள்ள அரசினதும் புலிகளி னதும் ஜனநாயகத் தன்மையை நாம் கவனத்தில் கொள்வது அவசியமானது. அரசின் தற்போதைய அணுகுமுறையில் போர் பற்றிய அம்சங்களை நாம் அவதானிப்பின் இம்முரண்பாடுகள் நன்கு புலப்படும். 1978ம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி பதவிக்கு வந்த காலம் முதல் இனப்பிரச்சினையானது உக்கிரமாகத் தொடங்கியது. 1983ம் ஆண்டின் இனக் கலவரங்கள் ஆயுத வன்முறைக்கான நியாயங்களை வழங்கியது. அன்று பதவியில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசு இனப்பிரச்சினை என்ற ஒன்று இருப்பதாக ஏற்றுக் கொள்ளவில்லை. இனப்பிரச்சினையைப் பயங்கர வாதமாக வர்ணித்து இராணுவ வழிகளில் அதைத் தீர்க்க முயற்சித்தது. இலங்கை அரசின் இம்முயற்சிகள் எதிர்பார்த்த பலனைத் தரவில்லை. ஜே. ஆர். அரசின் வெளிநாட்டுக் கொள்கைகள் இந்தியாவின் பாதுகாப் பிற்கு அச்சுறுத்தலாக இருப்பதையும், தென்னிந்தி யாவில் வாழும் 5 கோடி தமிழர்களும் இலங்கைத் தமிழர் களின் ஜனநாயகக் கோரிக்கைக்கு பக்கபலமாக இருப்பதையும் இலங்கை அரசு தனது கவனத்தில் கொள்ளத் தவறிவிட்டது. இதன் விளைவாக, சிறுபான்மை மக்களின் ஜனநாயக உரிமைப் போராட் டத்தை பயங்கரவாதமெனப் பிரகடனப்படுத்தி அதனை ஒடுக்க எடுக்கப்பட்ட முயற்சிகள் இந்திய அரசின் உதவியால் சாத்தியமாகவில்லை.

இலங்கையின் ஒருமைப்பாட்டையும் ஐக்கியத்

**பயங்கரவாதம் என்ற பெயரில் இனப் பிரச்சினையை ஒடுக்க 17 ஆண்டுகளாக உருவாக்கப்பட்ட அரசு என்ற பொறிமுறை சந்திரிக்கா அவர்கள் பதவிக்கு வந்தபின் ஏற்படுத்த விரும்பிய சமாதான முயற்சிக்கு உகந்ததாக அமையவில்லை. பாராளுமன்றத்தில் போதிய பலம் இல்லாமையினாலும் இராணுவத்தில் காணப்பட்ட போருக்கான முனைப்புக் காரணமாகவும் அவரின் சமாதான முயற்சிகள் தோல்வியடைந்தது மட்டுமல்லாது மீண்டும் போரை நோக்கி அரசு தள்ளப்பட்டது.**

தையும் வலியுறுத்திய அதேவேளை இலங்கைத் தமிழர்களுடைய நியாயமான ஜனநாயக உரிமைகளை வழங்கவேண்டுமென இந்தியா தொடர்ச்சியாக வலியுறுத்தியபோதெல்லாம். அவை சந்தேகக் கண் கொண்டே பார்க்கப்பட்டன. இதன் விளைவுதான் கடந்த 25 வருட கால ஆயுதப் போராட்டம். 1977ம் ஆண்டு முதல் 1994ம் ஆண்டு வரையான 17 ஆண்டுகள் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலமாகவே அமைந்தன. இந்நீண்ட காலத்திற்குள் பலமான இராணுவ உளவுப் பிரிவு, மற்றும் பல பாதுகாப்புத் தொடர்பான நிறுவனங்கள் உருவாக்கப்பட்டு இராணுவம் நாட்டின் மிக முக்கியமான தீர்மானங்களில் பெரும் ஆதிக்கம் செலுத்தும் நிலைக்கு வளர்க்கப் பட்டது. நாட்டில் இடம் பெற்று வரும் போர் நிலைமைகள் இரு சாராருக்கும் மிகவும் வாய்ப்பாக அமைந்தன. அதாவது, இராணுவத் தளபாட வர்த்தகத்தில் இராணுவமும், மக்களின் அன்றாட அத்தியாவசியப் பொருட்களின் வர்த்தகத்தில் வியாபாரிகளும் பலன் பெற்றனர். இதனால் ஊழலை மையமாகக் கொண்ட அரசியல் வாதிகளும் தமது நலன்களைப் பெருக்கிக் கொண்டனர். போர் நிலைமைகள் ஓர் குறிப்பிட்ட சாராரின், குறிப்பாக, அதிகாரத்தில் இருப்பவர்களின் நலன்களை வளர்ப்பதில் உதவியதால் போரைத் தொடர்வதும் ஓர் தேவையாக மாறியது. இக் காலகட்டத்தில் மக்களின் பொருளாதார வாழ்வு பின்தள்ளப்பட்டது. நாட்டின் முக்கியமான தேசிய வளங்கள் தனியார் மயமாக்கப் பட்டதுடன் வெளிநாட்டு நிறுவனங்களுக்கும் விற்கப் பட்டன. பெருந்தொகையான மக்கள் வேலையற்றவர் களானார்கள். விலைவாசி உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம், போர் என்பன சாதாரண மக்களின் வாழ்வைப் பாதிக்கத் தொடங்கின. இதன் விளைவாகவே, மக்கள் தமது 17 ஆண்டு காலக் கொடுமை வாழ்வுக்கு முடிவு கட்டும் வகையில், 1994ம் ஆண்டு சந்திரிக்கா அவர்களைப் பதவியில் அமர்த்தினார்கள். அரசியல் கட்சிக்கான பலமான தளம் இல்லாத பின்னணியில் சந்திரிக்கா அவர்கள் பதவி ஏற்றார்கள். இவரின் ஆட்சியின் ஆரம்பம் நம்பிக்கை அளிப்பதாகவே அமைந்திருந்தது. இனப்பிரச்சினைக்கான தீர்வை இவரால் வழங்க முடியும் என்ற நம்பிக்கை காணப்பட்டது. இலங்கையின் அரசியல் வரலாற்றிலேயே முதன்முறையாக இலங்கையில் இனப் பிரச்சினை உண்டு எனவும் இவ்வினப் பிரச்சினை கடந்த கால அரசுகளின் தவறான அணுகுமுறைகள் காரணமாகக் கூர்மையடைந்ததாகவும் கூறியதோடு 1983ம் ஆண்டின் இனக்கலவரத்திற்கு அரசுத் தலைவர் என்ற வகையில் சந்திரிக்கா அவர்கள் தனது கவலைகளையும் வெளியிட்டார். இலங்கை அரசியலில் சில அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்தும் வகையில் தனது அரசியல் நடவடிக்கைகளை ஆரம்பித்த சந்திரிக்கா அவர்கள் தனது இலட்சியங்களை நிறைவேற்ற, 17 ஆண்டுகளாக ஐக்கிய தேசியக் கட்சியால் உருவாக்கப்பட்ட அதே அரசியல் பொறிமுறையையே பயன்படுத்த வேண்டி ஏற்பட்டது. பயங்கரவாதம் என்ற பெயரில் இனப் பிரச்சினையை ஒடுக்க 17 ஆண்டுகளாக உருவாக்கப்பட்ட அரசு என்ற பொறிமுறை சந்திரிக்கா அவர்களின் சமாதான முயற்சிக்கு உகந்ததாக அமையவில்லை. பலமான அரசியற்கட்சிப் பலம் இல்லாமையாலும் உட்கட்சிக் குள் காணப்பட்ட அதிகாரப் போட்டிகள், இனவாதக் கூச்சல்கள் என்பவற்றினாலும் பாராளுமன்றத்தில் போதிய பலம் இல்லாமையினாலும் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி போதிய ஆதரவை வழங்காமையினாலும் இராணுவத்தில் காணப்பட்ட போருக் கான முனைப்புக் காரணமாகவும் அவரின் சமாதான முயற்சிகள் தோல்வியடைந்தது மட்டுமல்ல, மீண்டும் போரை நோக்கி அரசு தள்ளப் பட்டது.

போருக்கான பின்னணிகளை நாம் தெளிவாகத் தெரிந்திருப்பது அவசியமானது. அதுமட்டுமல்லாமல், அரசு என்பதன் செயற்பாடு எவ்வாறு தொழிற்படுகின்றது என்பதனையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். அரசாங்கமானது மக்களின் வரிப் பணத்தில் செயற்படுகின்றது. வரிப் பணத்தில் பெரும்பகுதியை நாட்டில் உள்ள மிகப் பெரிய தொழில் மற்றும் வர்த்தக நிறுவனங்களே வழங்குகின்றன. அரசின் தேவைகள் பெருகப்பெருக செலவினம் அதிகமாகிறது. செலவினத்தின் பெரும்பகுதியை நிறுவனங்களே ஈடு செய்வதால் இந்நிறுவனங்களின் அழுத்தங்களும் செல்வாக்குகளும் அரசின்மேல் பிரயோகிக்கப்படுகின்றன. அரசின் போர்ச் செலவினங்கள் அதிகரிப்பதாலும் அதற்குரிய பணத்தினை வர்த்தக மற்றும் தொழில் நிறுவனங்கள் வழங்குவதாலும் நாட்டின் உற்பத்தி மற்றும் வர்த்தகப் பொருட்களின் விலை அதிகரிக்கிறது. இதுவே மக்களின் சுமையாகிறது. இப்பொருளாதார சுமைக்கு எதிராக மக்கள் திரண்டு எழும்போது இவ்வர்த்தக நிறுவனங்களைப் பாதுகாக்கும் வகையில் அரசு மக்களுக்கு எதிராகக் குழம்புகிறது. இதுவே

சந்திரிக்கா அரசுக்கும் நிகழ்ந்தது. போரை ஒரு புறத்தில் நிகழ்த்திக் கொண்டு, மறுபுறத்தில் நாட்டின் முக்கியமான மூலவளங்களைத் தனியார் மயமாக்கும் திட்டங்களும் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருந்தன. எனவே, இன்றைய அரசு முன்னெடுத்திருக்கும் போருக் கான முனைப்புகள் ஒன்றும் புதிதானவை அல்ல. அவற்றிற்கும் ஓர் வரலாறு உண்டு என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஆனாலும் சந்திரிக்கா மற்றும் மகிந்த அரசுகளின் போக்கில் முன்னரைவிட மிகவும் வித்தியாசமான போக்கு இருப்பதையும் நாம் அவதானிக் கவேண்டும். இந்த இருவரது ஆட்சிகளில் மட்டும்தான் இனப்பிரச்சினை என்பது மிகவும் தெளிவாக அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்கான தீர்வுகளும் மிக முழுஅளவில் மேற்கொள்ளப்பட் டுள்ளது. தற்போதுதான் சிங்கள ஆட்சியாளர் தரப்பில் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து முழு அளவிலான தீர்வுத் திட்டங்கள் பற்றிப் பேசப்படுகின்றன. சந்தி ரிக்கா ஆட்சிக்காலத்தில் எடுக்கப்பட்ட முயற்சிகளின் தொடர்ச்சியாகவே இவை கருதப்படவேண்டும்.

இனப்பிரச்சினைக்கான முயற்சிகளை இவ்விரு அரசியல் தலைவர்கள் மேற்கொண்டபோதிலும் கடந்த கால ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறீலங்கா சுதந் திரக் கட்சி ஆட்சிக்காலங்கள்போல் இவை அமைய வில்லை. ஐக்கிய தேசியக்கட்சி, சிறீலங்கா சுதந்திரக் கட்சி என்பன தனித்து அரசு அமைக்கும் பலத்தை அன்று ஓரளவு பெற்றிருந்தன. அரசியலமைப்பில் வழங்கப்பட்ட விகிதாசார பிரதிநிதித்துவத் தேர்தல் முறை இவ்விரு பிரதான அரசியல் கட்சிகளின் பலத்தைக் குறைத்ததோடு, மத்தியில் கூட்டு அரசு அமைக்கும் வாய்ப்புகளையே அதிகம் வழங்கியது. இதன் காரணமாக, சந்திரிக்கா, மகிந்த ஆகியோரின் அரசுகள் பாராளுமன்றத்தில் பலம் வாய்ந்ததாக அமையவில்லை. இனவாதக் கொள்கைகளின் அடிப் படையில் தோற்றுவிக்கப்பட்ட கட்சிகள் என்பதால் இனப்பிரச்சினை தொடர்பாக எடுக்கப்பட்ட புதிய முயற்சிகளை கட்சிக்குள் பூரணமாக உள்வாங்க முடிய வில்லை. இதனால் இவ்விரு பிரதான கட்சிகளும் நாட்டின் புதிய மாறுதலுக்கு ஏற்ப அரசியல் மாற்றங் களை மேற்கொள்ள, பல உட்கட்சிப் போராட்டங்களை நடத்த வேண்டியுள்ளது. இனப்பிரச்சினையை மைய மாக வைத்து அரசியல் நடத்திய இக்கட்சிகள் தொடர்ந்தும் அதே அரசியலை நடத்த முடியாத நிலை யில் பல உட்கட்சிப் போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிறது. 21ம் நூற்றாண்டின் இலக்கு களுக்கு ஏற்பத் தமது போக்கை மாற்றிக்கொள்ள வேண்டிய நிலைக்கு இக்கட்சிகள் தள்ளப்பட்டுள்ளன. கட்சிக்குள் ஏற்பட்டு வரும் உள் மோதல்களை அவதா னிக்கும்போது மிகவும் ஆரோக்கியமான எதிர்காலத் துக்குரிய போராட்டங்கள் நடைபெற்று வருவதைக் காணமுடிகிறது.

இந்த அடிப்படையிலேயே சமாதான முயற்சிகளின் எதிர்காலம் பார்க்கப்படவேண்டும். நாட்டின் பொருளா தாரத்துறையில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. மிகவும் இறுக்கமான வகையில் தேசியப் பொருளா தாரம் சர்வதேச சந்தையுடன் இணைக்கப்பட்டுள்ளது மட்டுமல்லாமல், சர்வதேச சட்டங்களுடனும் பிணைக் கப்பட்டு கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றது. சுமுகமான பொருளாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமாயின் நாட்டில் போரற்ற சூழல் ஏற்பட வேண்டும், அதாவது, சமாதானம் ஏற்பட வேண்டும். எனவே சமாதானத்திற்கான முயற்சிகளும் பாரியளவில் ஆரம்பமாகி உள்ளன. தேசியப் பொருளாதாரம் சர்வ தேசப் பொருளாதாரத்துடன் இணைக்கப்பட்டதால் அதன் அரசியல் கட்டுமானமும் அதற்கு ஏற்றதாக நிர்மாணிக்கப்படுவது அவசியமாகிறது. இதன் காரண மாகவே சர்வதேச அழுத்தங்கள் முழு அளவில் இலங்கைமேல் பிரயோகிக்கப்படுகின்றன. எனவே சமாதானம் என்பது அரசின் முக்கியமான செயற்பாடாக அமைய வேண்டியுள்ளது.

அரசின் சமாதான முயற்சிகள் போரின் அனர்த்தங் களாலும் இராணுவத் தோல்விகளாலும் சர்வதேச அழுத்தங்களாலும் ஏற்பட்டிருப்பினும் அம்முயற்சிகள் போலியாக அமைய வாய்ப்பில்லை என்பது எமது கருத்தாகும். நாட்டில் நிலையான சமாதானச் சூழல் காணப்படுவது அவசியம் என்பதால், நிர்வாகக் கட்டு மானத்தில் சமாதான உருவாக்கம் என்பது சகல அங்கங்களிலும் அமைவது அவசியமாகிறது. பாராளு மன்றத்தில் போதிய பலமின்மையாலும், அரசியல் கட்சி கள் இனவாத அரசியலில் இருந்து விடுபடுவது தாமத மாகின்ற காரணத்தாலும் சீர்நெறி அடிப்படையில் சமா தான முயற்சிகளை மேற்கொள்வது தாமதமாகலாம் அல்லது பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்கலாம்.

**“ நாட்டில் நிலையான சமாதானச் சூழல் காணப்படுவது அவசியம் என்பதால் நிர்வாகக் கட்டுமானத்தில் சமாதான உருவாக்கம் என்பது சகல அங்கங்களிலும் அமைவது அவசியமாகிறது. பாராளுமன்றத்தில் போதிய பலமின்மையாலும் அரசியல் கட்சிகள் இனவாத அரசியலில் இருந்து விடுபடுவது தாமதமாகின்ற காரணத்தாலும் சீர்நெறி அடிப்படையில் சமாதான முயற்சிகளை மேற்கொள்வது தாமதமாகலாம் அல்லது பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்கலாம். ஆனால் சமாதானத்தைப் போலியாகக் கட்ட முடியாது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். ”**

ஆனால் சமாதானத்தைப் போலியாகக் கட்ட முடியாது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

இப்பின்னணியில் தற்போதைய அரசியல் நடவடிக் கைகளைப் பார்க்கும்போது போரும் சமாதானமும் புதிய இலக்கை நோக்கித் தள்ளப்பட்டு வருவதை நாம் அவதானிக்கலாம். போரானது பயங்கரவாதத்திற்கு எதிராகவும் சமாதானம் இனப் பிரச்சினைக்கான தீர்வை நோக்கிச் செல்வதையும் அவதானிக்கலாம். இங்கு நாம் சில யதார்த்தரீதியான பிரச்சினைகளைப் பார்ப் போம். புலிகளால் நடத்தப்படுவது விடுதலைப் போராட் டமே தவிர பயங்கரவாதமல்ல என்றும் பயங்கரவாதம் என்ற பெயரில் விடுதலைப் போராட்டத்தை நசுக்கி இனப்பிரச்சினையை ஒடுக்கிவிட அரசு முயற்சிப் பதாகவும் வாதிடப்படுகிறது. புலிகளால் நடத்தப் படுவது விடுதலைப் போராட்டம் அல்ல என்பதனை மிகவும் தெளிவாகவே அதன் போக்கு அடையாளப் படுத்துகிறது. மக்களுக்கு உத்தரவு போடும் நிலையும், மக்களின் அவலங்கள் தொடர்வதைத் தவிர்க்கும் அணுகுமுறை காணப்படாத நிலையிலும் அப்போராட் டம் 'விடுதலை' என்ற குணாம்சத்தை இழந்துவிடுகிறது. எந்த மக்களின் விடுதலையை நோக்கிப் போராட்டம் நடத்தப்படுகின்றதோ அந்த மக்களின் பாதுகாப்பு எதிரியினால் வழங்கப்படுவதைவிட அதிகமானதாக இருத்தல்வேண்டும். தற்போது மக்கள் எதிரியிடம் பாதுகாப்பை நோக்கி ஓடுகிறார்கள் எனில், அது விடுதலைப் போராட்டக் குணாம்சத்தின் முக்கிய அம்சத்தை இழந்துவிட்டது என்பதுதான். இப்படியான இன்னும் பல உதாரணங்களைக் காட்ட முடியும். இருப் பினும் இது ஒன்றே போதுமானது. எனவே புலிகளால் நடத்தப்படுவது 'விடுதலைப் போராட்டம்' அல்ல என்ற முடிவுக்கு நாம் செல்ல முடியும். இந்நிலையில் தற்போது இடம்பெறும் சம்பவங்களை எவ்வாறு வரையறுக்கலாம் என்ற நிலைமைக்குச் சென்றால் அது ஆயுதவன்முறை, பயங்கரவாதம் என்ற கட்டமைப்புக்குள் வரையறுக்கப் படுகின்றது.

21ம் நூற்றாண்டின் பொருளாதார உறவுகளும் அரசியல் நடவடிக்கைகளும் சர்வதேச சட்டங்களால் நிர்வகிக்கப்படுகின்றன. சர்வதேச நிறுவனங்களின் அதிகாரம் பல்வேறு நாடுகளின் அரசியலமைப்புச் சட்டங்களில் பகுதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக் கிறது. இந்நிலையில் புலிகள் இயக்கம் பயங்கரவாத இயக்கமாக பல்வேறு நாடுகளில் அடையாளப்படுத்தப் பட்டுள்ளமையும் எமது கவனத்திற்குரியது. எனவே, புலிகளின் நடவடிக்கைகள் பயங்கரவாதமே என்பது சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கப்பட்ட நிலையில், இலங்கை அரசு பயங்கரவாதத்திற்கு எதிராகச் செயற்படுவதை உலக நாடுகள் கண்டிக்க முடியாத நிலையில் இருப்பதையும் நாம் அவதானிக்க வேண்டும். எனவே இலங்கை அரசின் தற்போதைய செயற்பாடு களுக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைத்து வருவது ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

இலங்கை அரசின் சமாதான முயற்சிகள் போலி யானவை என்றும், சர்வதேச அரசுகளை ஏமாற்றும் நோக்கம் கொண்டவை எனவும் கூறி அதன் செயற் பாடுகளை முற்றாக நிராகரித்துச் செல்ல முடியாது

> **“இராணுவக் கெடுபிடிகளில் இருந்து மக்களைப் பாதுகாக்கும் 'மக்கள் படை' தாமே எனவும் மக்கள் தமது உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து செயற்படவேண்டும் எனவும் பணிவான கட்டளைகள் வழங்கப்பட்டன. உத்தரவுக்குக் கீழ்ப்படியாதவர்கள் என்ற பெயரில் மாற்று அரசியல் கருத்துடையோர் - குழுக்கள் - இயக்கங்கள் என்பன படிப்படியாக ஒழிக்கப்பட்டன.”**

என்பது எமது கருத்தாகும். அதன் போக்கிலும் உள் கட்டுமானங்களிலும் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் போதி யனவாக இல்லை என்பதை ஏற்றுக் கொண்டாலும், நாட்டில் காணப்படும் அரசியல்சூழ்நிலை அவற்றை ஓர் எல்லைக்கு அப்பால் நகர்த்த முடியாமல் தடுத்திருப் பதையும் நாம் அவதானிக்க வேண்டும்.

எனவே, தற்போது இடம்பெற்று வரும் போருக்கும், சமாதானத்திற்கும் ஓர் வரலாறு உண்டு என்ற வகை யில், போரைத் தணிக்கவும் சமாதானத்தை ஏற்படுத் தவும் உதவக்கூடிய வழிகள் எவை என்ற கேள்விகள் எழுகின்றன.

கடந்த 25 ஆண்டுகாலப் போர்நிலைமைகள் சிங் கள சமூகத்தில் ஒரு சாராரை ஓர் ஆதிக்க நிலைக்கு எடுத்துச் சென்றது போலவே, தமிழ்ச் சமூகத்திலும் இவ்வாறான ஓர் போக்கு வளர்ந்துள்ளதைக் காணலாம் சிறுபான்மை மக்களின் அரசியல் உரிமைகள், பேரின வாத ஒடுக்குமுறைக்கு எதிரான தன்மை, சிறுபான்மை மக்களுக்கான சுயநிர்வாகம் என்ற அடிப்படைக் கோட்பாடுகளை மையமாகக் கொண்டே அரசியற் தலைமைகள் தமிழ்ப் பகுதிகளில் தோன்றின. இயக்க அரசியலுக்கு முற்பட்ட காலத்தில் ஜனநாயகச் சூழல் காணப்பட்டதால் போட்டி அரசியல் காணப்பட்டது. இப்போட்டி அரசியல் சமூக முன்னேற்றத்துக்கு அவசியமானது என்றபோதிலும் அதிற் காணப்பட்ட, முரண்பட்ட தன்மைகள் சமூக முன்னேற்றத்திற்குத் தடை எனச் சிலரால் கருதப்பட்டது. இது சமூகத்தின் பலவீனத்தை உணர்த்துவதாக வாதிக்கப்பட்டது. போட்டி அரசியலானது பேரம் பேசும் அரசியலைப் பலவீனப்படுத்துவதாகவும் பலமான ஒரே தலைமை இருக்குமாயின் பேரம் பேசும் ஆற்றல் அதிகரிக்கும் என்றும் கருதப்பட்டது. இவ்வாறான ஒரு கருத்து நிலையே புலிகள் மத்தியில் நிலவியது. பல கட்சிகள், பல குழுக்கள் என்பன பலவீனத்தின் தோற்றப்பாடாக எதிரியால் கணிக்கப்படுமெனவும் இதனால் இலக்கை நோக்கிச் செல்வதில் தடங்கல்கள் ஏற்படும் எனவும், இவ்வாறான போக்கைத் தவிர்க்க வேண்டுமெனில்,

**"தமிழ்ப் பிரதேசம் முழுஅளவில் தமது கட்டுப்பாட்டுக்குள் உத்தியோகபூர்வமாக வரும்வரை போர்நிலைமைகளைத் தொடர்ந்து வைத்திருப்பது இவர்களுக்கு அவசியத் தேவையாக இருந்தது. புலிகளைப் பொறுத்தவரையில் தமது அதிகார இருப்பை மையப்படுத்தும் முயற்சிகள் ஏற்பட்டால் மாத்திரமே அவர்களால் சமாதானம் பேச முடியும் என்ற நிலை காணப்படுகிறது."**

பலமான ஒரு இயக்கம் கட்டப்பட்டு எதிரிக்குச் சமமான பலத்தில் உருவாக்கப்பட்டால் எதிரிகள் எம்மை நோக்கிப் பேச வருவார்கள் என்ற கோட்பாட்டை முன்வைத்து ஏனைய அரசியல் சக்திகளை ஒழித்துக் கட்டினார்கள்.

புலிகளின் இந்த அரசியல் அணுகுமுறைக்கும் ஓர் தொடர்ச்சி உண்டு. தமிழரசுக் கட்சிக்கும் தமிழ் காங்கிரஸ் கட்சிக்குமிடையே பலத்த மோதல்கள் ஏற்பட்டன. மக்கள் கட்சிகளின் பின்னால் அணி திரட்டப்பட்டார்கள். தமிழ்க் காங்கிரஸ் அரசை ஆதரித்தால் தமிழரசுக் கட்சி அதை எதிர்த்து வந்தது. இந்த நிலை தொடர்ந்து காணப்பட்டதால் பாராளுமன்ற அரசியற் பலம் பிரிந்து காணப்பட்டது. இது ஜனநாயகத்தின் வளர்ச்சி என்பதைவிட பலவீனம் என்றே மக்கள் முன் கூறப்பட்டது. அரசை ஆதரிப்பவர்கள் துரோகிகளாக் கப்பட்டார்கள். இவ்வாறான அரசியல் சூழல் தனிக் கட்சிக்கான பலம் சேர்க்கும் வாதத்திற்கு நியாயமாக் கப்பட்டது. ஒரே கட்சியைச் சார்ந்த அனைவரையும் பாராளுமன்றம் அனுப்பினால் பேரம் பேசும் ஆற்றல் அதிகரிக்கும் எனவும் இதன் மூலம் ஆட்சியை அமைப்பது யார் என்பதைத் தீர்மானிக்கும் சக்தியாக நாம் அமைவதால் எமது கோரிக்கைகளை வெல்ல அதிக வாய்ப்புக் கிடைக்கும் என்ற வாதம் முன்வைக்கப் பட்டது.

இதேபோன்ற வாதமே புலிகள் தரப்பாலும் முன் வைக்கப்பட்டது. பல்வேறு குழுக்கள், இயக்கங்கள் என்பன பலவீனத்தின் அறிகுறி எனவும் பேரம் பேசும் ஆற்றலை அதிகரிப்பதாயின் ஒரே இயக்கமே இருத்தல் வேண்டும் என்ற வாதம் தமிழரசுக் கட்சியின் போக்கின் தொடர்ச்சியாக இருப்பதை அவதானிக்கலாம். அன்று அவர்கள் மக்களின் பலத்தினை ஒருமுகப்படுத்த அத்தந்திரத்தை மேற்கொண்டார்கள். மக்களைப் பக்க பலமாக வைத்திருந்தார்கள். ஆனால் இங்கு மக்களுக்குப் பதிலாக ஆயுதமே பேரம்பேசும் ஆற்றலைத் தீர்மானித்தது. அன்றைய தலைவர்கள் மக்களை ஒருமுகப்படுத்தினார்கள். ஆனால் ஒருமுகப்படுத்தப் பட்ட அரசியல் வேலைத்திட்டத்தை அவர்களால் முன் வைக்க முடியவில்லை. நாட்டின் அரசியல் அமைப்பு வரையறைகளுக்கு அப்பால் அவர்கள் செல்ல முயற்சிக்கவில்லை. ஏனெனில் அதற்கு மீறிய செயல்கள் அவர்களின் நலன்களையே பாதித்துவிடும் என்பதை உணர்ந்திருந்தார்கள். அதன் தொடர்ச்சியே இன்றும் உள்ளது. பலமான ஆயுதக்குழுவை உருவாக்க முடிந்ததே தவிர, பொருத்தமான அரசியல் இலக்கை இவர்களால் தீர்மானிக்க முடியவில்லை. பலமான ஆயுதக் குழுவின் உருவாக்கம் ஆரம்பத்தில் சிறுஅளவில் இருந்ததால் இவை சிறுசிறு தாக்குதல்களாக அமைந்தன. இச்சிறு தாக்குதல்களின் பதிலடி பலமானதாக இருந்ததால் ஆயுதக்குழுவின் பரிமாணமும் விஸ்தரிக்கப்பட்டது. தாக்குதல்களும் பதிலடிகளும் சிறு அளவில் இருந்தபோது அது மக்களைப் பெருமளவில் பாதிக்காததால் அவர்கள் வெறும் பார்வையாளர் நிலையில் இருந்து இவற்றையிட்டு மகிழ்ச்சியடைந்தார்கள். காலப்போக்கில் தாக்குதல்கள், பதிலடிகள் விரிவடைய விரிவடைய அவை மக்களைப் பாதிக்கத் தொடங்கின. இப்பாதிப்புக்களின் ஆழங்கள் மிகவும் உணர்ச்சியூட்டப்பட்ட நிலையில் மக்கள்முன் பிரச்சார வடிவில் எடுத்துச் செல்லப்பட்டன. இராணுவக் கெடுபிடிகளில் இருந்து மக்களைப் பாதுகாக்கும் 'மக்கள் படை' தாமே எனவும் மக்கள் தமது உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து செயற்படவேண்டும் எனவும் பணிவான கட்டளைகள் வழங்கப்பட்டன. உத்தரவுக்குக் கீழ்ப்படியாதவர்கள் என்ற பெயரில் மாற்று அரசியல் கருத்துடையோர், குழுக்கள், இயக்கங்கள் என்பன படிப்படியாக ஒழிக்கப்பட்டன.

மக்கள்மீது பிரயோகிக்கப்பட்ட அதிகாரக் கட்டுப்பாடு காலப்போக்கில் அரசின் விதிமுறைக்கு உட்பட்டு செயற்படுவது என்ற படிமுறைக்குள் எடுத்துச் செல்லப் பட்டது. ஓர் அரசின் ஆணைக்கு உட்பட்டுச் செயற் படுபவர்கள் என்ற மனோநிலைக்கு நாளாந்தப் பிரச்சாரங்கள் மக்களை வழிநடத்திச் சென்றன.

இவ்வாறான அதிகாரப் பிரயோகத்திற்கு இராணுவத்திற்கு எதிரான போர் நிலைமைகளே அதற்கான பின்புலத்தை வழங்கின. எனவே, போர் என்பது தற்போது இன்றியமையாத தேவையாக மாறிவிட்டது. அரசியல் நடவடிக்கைகள் மட்டுமல்ல, மக்களின் குடும்ப வாழ்க்கை வரை இச் செயற்பாடுகள் ஊடுருவின. கட்டுப்பாட்டுப் பிரதேசத்தின் பொருளாதார உறவுகள் இவர்களாலேயே தீர்மானிக்கப்பட்டன. உளவுத் துறைகள் வலைப்பின்னல் போன்று செயற்பட்டன. இவை யாவற்றையும் சமாதான சூழலில் செய்ய முடியாது. அங்கு மக்களைக் கட்டுப்படுத்துவது மிகவும் வில்லங்கமானது.

சிறுசிறு அளவில் ஏற்படுத்தப்பட்ட இச்சமூக ஒடுக்குமுறைக் கருவிகள், போர் ஆண்டுக் கணக்கில் நீடித்ததால் சமூகத்தை முழுஅளவில் கட்டுப்படுத்தும் அளவுக்கு வளர்ந்துள்ளன. தமிழ்ப் பிரதேசம் முழு அளவில் தமது கட்டுப்பாட்டுக்குள் உத்தியோக பூர்வமாக வரும்வரை போர் நிலைமைகளைத் தொடர்ந்து வைத்திருப்பது இவர்களுக்கு அவசியத் தேவையாக இருந்தது.

இதுவே தமிழ்ப்பகுதிகளில் போர் நிலைமைகள்

தொடர்ந்திருப்பதற்கான அடிப்படைக் காரணமாகும். எனவே சிங்களப்பகுதியில் செயற்படும் ஒரு சாராருக்கும் தமிழ்ப்பகுதியில் செயற்படும் ஒரு சாராருக்கும் போர் தேவையான அம்சமாகும். இவர்களே அதிகாரத்தின் உச்சியிலும் உள்ளார்கள். இந்நிலையில் சமாதானம் எவ்வாறு சாத்தியமாகும்? தென்னிலங்கையில் சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டால், அதற்கும் தமக்கும் சம்பந்தமில்லை எனப் புலிகள் கூறுகின்றனர். ஆனால் இவர்கள் தமக்குப் பொருத்தமானவரோடு பேசுவதற்கு எப்போதும் தயாராகவே உள்ளனர். சிங்களத் தலைவர்களை நம்ப முடியாதெனக் கூறியபடியே, பிரேமதாசா அவர்களோடும் ரணில் அவர்களோடும் பேசுவதற்குச் சென்றார்கள். ஏன் இவர்கள் சென்றார்கள்? தமிழ்ப்பிரதேசத்தின் உத்தியோகபூர்வக் கட்டுப்பாட்டினைத் தமது கையில் எடுப்பதற்காகவே இவர்கள் சென்றார்கள்.

சமாதானத்தை அடைவதற்குச் சிங்கள அரசியல் சக்திகள் மத்தியில் காணப்படும் முரண்பாடுகள் மட்டுமல்ல, தமிழ் அரசியல் தலைமைகளுக்குள் குறிப்பாக, புலிகள் மத்தியில் காணப்படும் முரண்பாடுகளும் இதற்கு முக்கிய காரணமாகும். இதற்கு நாம் வரலாற்றில் இருந்து சில உதாரணங்களைப் பார்ப்போம்.

1989ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12ம் திகதி சிங்களத் தமிழ் புதுவருட தினத்தை ஒட்டி தற்காலிக போர் நிறுத்தம் ஒன்றை அன்றைய ஜனாதிபதி பிரேமதாசா அவர்கள் அறிவித்திருந்தார். இதற்கேற்ப, இந்திய சமாதானப் படையினரும் அதனை ஏற்றிருந்தனர். இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி விடுதலைப்புலிகள் பிரேமதாசாவிற்குப் பகிரங்கக் கடிதமொன்றை எழுதினார்கள். அக்கடிதத்தில் இந்திய ஆக்கிரமிப்புப் படைகள் தமது பகுதியில் உள்ளவரை தாம் போர்நிறுத்தத்தை ஏற்கப்போவதில்லை எனத் தெரிவித்திருந்தனர். ஜே. ஆர். அவர்கள் மேற்கொண்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை பிரேமதாசா அவர்கள் மிகவும் பகிரங்கமாக எதிர்த்த சூழலில் இக்கடிதம் அவருக்கு அனுப்பப்பட்டது. அதில் தமது இந்திய எதிர்ப்பு நிலைப்பாட்டைத் தெரிவித்திருந்தார். இக்கடிதத்தைத் தொடர்ந்து அப்போதைய பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா புலிகளைப் பேச வரும்படி கடிதம் அனுப்பினார். இதற்குப் பதில் 1989ம் ஆண்டு ஏப்ரல் 15ம் திகதி லண்டனில் இருந்து தொலைநகல்மூலம் அழைப்பை ஏற்பதாக கடிதம் விரைந்தது.

இதைத் தொடர்ந்து புலிகளுக்கும் அரசுக்கும் இடையே துரித கதியில் உறவுகள் வளர்ந்தன. இந்தியப் படைகளை மூன்று மாதத்துக்குள் விலகுமாறு பிரேமதாசா அறிவித்தார். கொழும்பில் உள்ள இந்து ஆலயத்தில் விசேட பூசைக்கு ஏற்பாடு செய்தார். பாலசிங்கம் அவர்களையும் அடல் பாலசிங்கம் அவர்களையும் கொழும்புக்கு அழைத்தார். வெளிநாட்டில் இருந்த பிரபாகரன் அவர்களின் மனைவியையும் பிள்ளைகள் இருவரையும் இலங்கைக்கு அழைத்தார். புலிகளின் முக்கியஸ்தர்கள் தமது ஆயுதங்களுடன் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் தங்க ஏற்பாடு செய்தார்.

இவ்வாறு ஆரம்பமான சுமுகமான உறவுகள் பின்னர் சிக்கல் நிலையை அடைந்தன. இதற்கு முக்கிய காரணம் அரசியலமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்கும்படியும் அன்றிருந்த ஈ.பி.ஆர்.எல்.எப். தலைமையிலான மாகாண அரசை நீக்கும்படி கோரியமையுமே ஆகும். இந்திய சமாதானப்படை வெளியேறியதும் மாகாண நிர்வாகத்தைக் கைப்பற்றி தமது அதிகார இருப்பை உத்தியோகபூர்வமாக்க எடுத்த முயற்சியின் காரணமாகவே அப்பேச்சுவார்த்தை முயற்சி தோல்வியடைந்தது.

இன்னொரு சம்பவத்தையும் பார்ப்போம்.

1994ம் ஆண்டு நாட்டில் சமாதானம் ஏற்படுத்தப் போவதாகக் கூறி சந்திரிக்கா அவர்கள் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். எதிர்க்கட்சியின் ஆதரவு இல்லாவிடினும் புலிகளுடன் பேசி முடிவு செய்யப் போவதாகத் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து போர்நிறுத்தத்தை மேற்கொள்வதாக புலிகள் ஒருதலைப் பட்சமாக அறிவித்தனர். இப்போர் நிறுத்த ஒப்பந்தம் அறிவித்த காலப்பகுதியில் இலங்கைக் கடற்படையின் பாரிய போர்க்கப்பல் மன்னாருக்கு அண்மையில் புலிகளால் மூழ்கடிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அரசுக்கும் புலிகளுக்கும் பேச்சுவார்த்தை ஆரம்பமாக இருந்த நாளுக்கு முதல்நாள் ஜனாதிபதி வேட்பாளர் காமினி திசநாயக்க கொல்லப்பட்டார். புலிகளுடன் அரசு பேச எடுத்த முயற்சிகளுக்கு இவை பெரும் தடையாக அமைந்தன. இருந்த போதிலும் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்த போது அரசு தரப்பில் பங்குபற்றியவர்கள் அரசின் உயர் மட்டத்தில் இருந்து வரவில்லையென்றும் இது தம்மை அவமதிப்பதாக இருப்பதாகவும் முறையிட்டார்கள். தம்மைச் சமமாக மதிக்கவில்லை என்பதே இவர்களுடைய பிரச்சினையாக இருந்தது.

இந்த இரு சம்பவங்களும் தமிழ்ப்பிரதேசங்களின் அதிகார இருப்பினை உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கச் செய்யும் உத்திகளாகவே அமைந்தன. இந்நிலை அடையப்படும்வரை போர்நிறுத்தம் ஏற்படுவ

**“ போர் - சமாதானம் என்பவை பற்றி அரசும் புலிகளும் மட்டும் பேசுவதால்தான் இந்த நிலை காணப்படுகிறது. இரு பக்கத்திலும் போருக்கான தேவை இருப்பது போல சமாதானத்திற்கான தேவையும் இருக்கிறது. ஆனால் தமிழ்ப் பிரதேசங்களின் அரசியல் எதிர்காலம் குறித்து அங்கு வாழும் மக்களுடன் பரந்தளவில் பேசப்படவேண்டிய தேவை உள்ளது. ”**

**ஆயுத வன்முறையின் தொடர்ச்சியில் இனங்கள் மத்தியில் அவநம்பிக்கைகள் மிகவும் பலமாக வளர்ந்துள்ளன. வடக்கு - கிழக்கிற்கான தனித்தனி நிர்வாகம் அறிவிக்கப்பட்ட பின்னர் முஸ்லிம் மக்கள் சிங்களப் பேரினவாதமும் தமிழ் மேலாதிக்கவாதமும் திட்டமிட்டுச் தங்களுக்குச் சதிசெய்வதாக உணர்கின்றனர். தமது இருப்பை உறுதிப்படுத்த தாமும் ஆயுத வன்முறையைத் தேர்ந்தெடுப்பதற்குத் தள்ளப்படுவதாகக் கூறுகின்றனர். இந்நிலையில் இந்த இருசாராரிடமும் - குறிப்பாகப் புலிகளிடம் - சமாதான முயற்சிகளை ஒப்படைப்பதால் நிலைமை சீராகுமா?**

தற்கான வாய்ப்புக்கள் இல்லை என்பதும் போர் தொடர்ந்து நீடிப்பது அதிகார இருப்பைப் பேணுவதற்கு அவசியமாக அமைவதையும் காணலாம்.

பேச்சுவார்த்தை, சமாதானம் என்பவை குறித்து பேசப்படவேண்டுமாயின் இந்நிலைமைகள் பற்றிய தெளிவு அவசியமாகிறது. புலிகளைப் பொறுத்த வரையில் தமது அதிகார இருப்பை மையப்படுத்தும் முயற்சிகள் ஏற்பட்டால் மாத்திரமே அவர்களால் சமாதானம் பேச முடியும் என்ற நிலை காணப்படுகிறது. அவர்களால் முன்மொழியப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை முன்மொழிவுகளும் அவர்களின் பெரும்பான்மையை உள்ளடக்கிய நிர்வாகம் ஒன்றினை நோக்கமாகக் கொண்டதையே முன்மொழிந்தார்கள்.

இதில் இருந்து புலப்படுவது என்னவெனில், புலிகளின் போக்கில் மாற்றங்கள் ஏற்பட்டால் அல்லது புலிகளுக்கு உரிய இடம் வழங்கப்படக்கூடிய தீர்வு முன்மொழியப்பட்டால் மாத்திரமே சமாதானம் சாத்தியமாகும் என்ற நிலை காணப்படுகின்றது. புலிகளுக்கு உரிய இடத்தை வழங்கக்கூடிய தீர்வை அரசு வழங்குமா என்ற கேள்வி எழுகிறது. இதற்கு ஆம் என்றும் இல்லை என்றும் பதில் கூறலாம்.

இலங்கையின் பொருளாதாரம் இப்போர்நிலைமை காரணமாகத் தொடர்ந்து வீழ்ச்சியடைந்து செல்லுமானால் புலிகளுடன் பேசத் தீர்மானிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்றாகிறது. இந்நிலையில் புலிகளின் பலம் வடக்கு கிழக்கில் விஸ்தரிக்கப்பட்ட நிலையில், அது அரசுக்கு மேலும் சிக்கலை ஏற்படுத்தக் கூடும். எனவே, புலிகளின் பலத்தைக் கிழக்கில் குறைத்து கிழக்கை விடுவித்தபின் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களின் கையில் குறிப்பிட்ட காலத்துக்கு நிர்வாகத்தை வழங்க அரசு சம்மதிக்கலாம். இதன் மூலம் போர்நிலைமைகளைக் கட்டுப்படுத்தலாம் என அரசு கருதலாம்.

போரின் மூலம் வெற்றிபெற முடியாது என்ற நிலையில் அரசின் போக்கு உள்ளது. இருப்பினும் புலிகளைக் கணிசமான அளவு பலவீனமாக்க வேண்டும் என்ற நிலை காணப்படுகிறது. இது சாத்தியமானால், வடக்குப் பகுதியில் ஏனைய அரசியல் சக்திகளைப் பயன்படுத்தி அங்கு தேர்தல் நடத்தி புலிகளை மேலும் பலவீனமாக்க முயற்சிக்கலாம். ஆனாலும், அரசு ஏனைய ஜனநாயக சக்திகளை பலப்படுத்துமா என்ற கேள்வி எழுகிறது. வடபகுதியில் உள்ள இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் புலிகள் நடமாடும் அளவுக்கு ஏனையோர் நடமாட முடியாத நிலை காணப்படுகிறது. போர்நிறுத்த ஒப்பந்தத்தில்கூட அதற்கான வாய்ப்புகள் அழிக்கப்படவில்லை. புலிகளுக்கும் மக்களுக்கும் இடையே பெரும் இடைவெளி காணப்படுகிறது.

கடந்த 25 வருட காலப் போர் நிலைமைகளும், இவ் விடைக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள், பொய்ப்பிரச்சாரங்கள் என்பவற்றின் தாற்பரியங்களும் மக்களால் புரிந்துகொள்ளப்பட்டன. அத்துடன் கடந்த 4 வருட கால போர்நிறுத்த காலமும், இக்காலத்தில் இடம்பெற்ற அரசியல் படுகொலைகளும் சமாதானம்பற்றிய நம்பிக்கைகளை இழக்கச் செய்தன. இதனால் மக்களுக்கும் புலிகளுக்கும் இடையே இடைவெளி ஏற்பட்டுள்ளது. இவ்விடைக்காலத்திலாவது மக்களைத் திரட்டி ஜனநாயகரீதியிலான அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு ஊக்கமளிக்கவில்லை. இதுவே அரசு ஜனநாயகத்தில், குறிப்பாக, தமிழ்ப் பிரதேசங்களில் அவ்வாறான சூழ்நிலையை ஏற்படுத்த உதவுமா என்ற கேள்வியை எழுப்புகிறது.

போர், சமாதானம் என்பவை பற்றி அரசும் புலிகளும் மட்டும் பேசுவதால்தான் இந்த நிலை காணப்படுகிறது. இரு பக்கத்திலும் போருக்கான தேவை இருப்பதையும் அதேபோல சமாதானத்திற்கான தேவையையும் பார்த்தோம். ஆனால், தமிழர் தரப்பில் சமாதானம் என்பது அரசியல் அதிகார இருப்பை பலப்படுத்தும் நோக்கத்துடன் முயற்சிக்கப்படுவதால் தமிழ்ப் பிரதேசங்களின் அரசியல் எதிர்காலம் குறித்து அங்கு வாழும் மக்களுடன் பரந்தளவில் பேசப்படவேண்டிய தேவை உள்ளது.

25 வருட கால ஆயுத வன்முறை இனங்கள் மத்தியில் உள்ள நல்லிணக்கத்தை சீர்குலைத்துள்ளது. அவநம்பிக்கைகள் மிகவும் பலமாக வளர்ந்துள்ளன. இந்நிலையில், சமாதான முயற்சிகள் புலிகள் சம்பந்தமாக அமையுமானால் அவை மேலும் விரிசல்களையே ஏற்படுத்தும் அபாயங்கள் காணப்படுகின்றன. வடக்கு, கிழக்கிற்கான தனித்தனி நிர்வாகம் அறிவிக்கப்பட்ட பின்னர் முஸ்லிம் மக்கள் மத்தியிலே மிக அதிகளவில் விரக்தி ஏற்பட்டு வருகிறது. சிங்களப் பேரினவாதமும் தமிழ் மேலாதிக்கவாதமும் திட்டமிட்டுச் சதிசெய்வதாக உணர்கின்றனர். தமது இருப்பை உறுதிப்படுத்த தாமும் ஆயுத வன்முறையை தேர்ந்தெடுப்பதற்குத் தள்ளப்படுவதாகக் கூறுகின்றனர். இந்நிலையில் இந்த இருசாராரின் கையில் குறிப்பாகப்

புலிகளின் கையில் சமாதான முயற்சிகளை ஒப்படைப் பதால் நிலைமை சீராகுமா என்ற கேள்வி எழுகிறது.

நிலையான சமாதானத்தை நோக்கி நாம் செல்ல வேண்டுமெனில், அம்முயற்சிக்குத் தடையாகவுள்ள பிரதான காரணிகள் குறித்து மிகவும் தெளிவாகவும் வெளிப்படையாகவும் பேசப்பட வேண்டும். குறை களைப் பற்றிப் பேசுவது பலவீனத்தை ஏற்படுத்தும் என்ற வாதங்கள் அர்த்தமற்றவை. இவை நிவர்த்தி செய்யப் படவேண்டுமெனில், அவை பேசப்படவேண்டும். அந்த வகையில், புலிகளின் அணுகுமுறையில் காணப்படும் தவறுகள் சுட்டிக் காட்டப்படவேண்டும். அவர்களின் செயற்பாடுகளில் குறிப்பிட்ட மாற்றங்கள் குறிப்பிட்ட காலப்பகுதியில் ஏற்படுத்தப்படவேண்டும் என்ற வற்புறுத்தல்கள் முன்வைக்கப்படவேண்டும். தமிழ்ச் சமூகத்தின் முன்னேற்றத்தைத் தொடர்ந்தும் இவர்கள் தடுத்து வைத்திருக்க முடியாது.

தமிழ் அரசியல் வரலாற்றிலே எந்த ஒரு அரசியல் தலைமைக்கும் கிடைக்காத சகல வாய்ப்புகளும் புலிக ளுக்குக் கிடைத்தன. விரலசைத்தால் வாக்களிக்க மக்கள் தயாராக இருந்தார்கள். இலக்கை அடைவ தற்கு ஆயிரக்கணக்கில் தங்களைத் தியாகம் செய்யத் தயாராக இருந்தார்கள். சர்வதேச அரசுகள் ஆதரவ ளிக்கத் தயாராக இருந்தன. அரசு பேசத் தயாராக இருந்தது. ஆனால் இத்தனை வாய்ப்புகளையும் சரி யாகப் பயன்படுத்தும் சந்தர்ப்பத்தை இவர்கள் இழந்தனர். எனவே தொடர்ந்தும் சமாதான முயற்சி களுக்குத் தடையாக இவர்கள் இருக்க முடியாது. 25 வருட காலம் வழங்கப்பட்டிருந்தும் அதைச் சரியாகப் பயன்படுத்தத் தவறி உள்ளனர். இந்நிலையில் சமூ கத்தின் எதிர்கால நலன் கருதி தமது போக்கை மாற்றுவதே பொருத்தமானதாகும்.

தமிழ் ஈழக் கோரிக்கை, தமது கையில் அதிகாரம் என்பன 21ம் நூற்றாண்டின் சமூக, அரசியல் தேவை களுக்குப் பொருத்தமானதாக இல்லை. இவ்விரு கோரிக்கைகளும் அடிப்படையில் ஜனநாயக விரோத மானவை. பல்லின மக்களைக் கொண்டுள்ள ஒரு சமூகத்தின் அரசியல் போக்கை தனி ஒரு அரசியல் இயக்கம் அல்லது கட்சி மக்களின் சம்மதமின்றித் தீர்மானிக்க முடியாது. சமூகத் தேவைக்கும் பொருளா தார நிர்மாணத்திற்கும் பொருத்தமில்லாத இக்கோரிக் கைகள் முற்றாக நிராகரிக்கப்பட வேண்டும். இக்கோ ரிக்கைக்கான நியாயங்கள் வலுவானதாக இருப்பினும் நியாயங்கள் மட்டும் பொருத்தமான தீர்வைத் தரப் போவதில்லை. அரசியல், சமூக, பொருளாதார சூழல் களுக்கு ஏற்பவே தீர்வுகள் அமைய வேண்டும்.

அந்த வகையில் ஐக்கிய இலங்கைக்குள் பொருத் தமான தீர்வை நோக்கி நகர்வதே ஆரோக்கியமான தாகும். 50 வருட காலத்திற்கு மேலாக கட்டி எழுப் பப்பட்ட சிங்கள பேரினவாத சிந்தனைகள் குறிப்பிட்ட இலக்கைச் சென்றடையவில்லை. அவை தேசத்தை சீரழித்துள்ளன. இதனைச் சிங்கள மக்களும் உணரத் தலைப்பட்டுள்ளார்கள். இதன் விளைவாகப் பல்வேறு தீர்வுத் திட்டங்கள் சிங்கள மக்கள் மத்தியிலிருந்து வெளிவருகின்றன. இவை நாம் எதிர்பார்த்தளவு மாற் றத்தை வெளிப்படுத்தாமல் இருக்கலாம். ஆனால் அடிப்படை மாற்றம் ஒன்றிற்கு சிங்கள சமூகம் தயாரா கின்றது என்பதனை நாம் புரிந்து கொள்ள வேண்டும். சிங்கள சமூகத்தின் மத்தியில் இருந்து சந்திரிக்கா காலத்திலும் மகிந்த காலத்திலும் தீர்வுத் திட்டங்கள் வெளியாகின. ஆனால் இவற்றைப் பயனுள்ள விதத்தில் மாற்றி, அர்த்தமுள்ள விதத்தில் முன்னெடுத்துச் செல்ல புலிகள் தயாராக இல்லை. இதற்குக் காரணம், இவர்கள் தம்மைச் சுற்றி ‘தமிழ் ஈழம்’ என்ற போலிக் கோட்டையை எழுப்பி, அதனைச் சுற்றி பெரும் கற்பனை அரசியல் கனவுகளையும் புனைந்துள்ளனர். இதிற் காணப்படும் போலி அம்சங்களும் அதன் பலவீனங் களும் மக்கள் முன் வெளிப்படுத்தப்படவேண்டும்.

சமீபத்தில் இலங்கையின் சிறந்த கல்விமான்களால் முன்வைக்கப்பட்ட இனப் பிரச்சனைக்கான முன்மொழி வுகள் முழு அளவில் விவாதிக்கப்பட வேண்டும். இக்கல்விமான்களின் அறிக்கை மேலும் சீர்திருத்தப் பட்டு திஸ்ஸ விதாரண அவர்களால் மீளவும் சமர்ப்பிக் கப்பட்டுள்ளது. இவைபற்றிய விவாதம் முழுவீச்சில் தமிழ்ப் பிரதேசங்களில் நடத்தப்படவேண்டும். இலங் கையர் என்ற தேச உருவாக்கத்திற்கான அடித் தளங்கள் பலமான விதத்தில் போடப்படுவதற்கான சாத்தியங்கள் தென்படுகின்ற இவ்வேளை, அதனைப் பயன்படுத்தி துரித மாற்றத்தை ஏற்படுத்த இலங்கையில் வாழும் சகல இனங்களும் முயற்சிக்க வேண்டும். நாம் எதிர்பார்க்கும் வகையில் முன்னேறாமல் இருக்கலாம். ஆனால் உண்மையான மாற்றத்திற்கான முன்னெ டுப்புகள் காணப்படுவதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இலங்கையின் பொருளாதாரத்தில் தமிழ்ப் பிரதேசங்கள் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ளன. போரை உக்கிரப்படுத்தும் சக்திகள் மக்களின் எதிர் காலம் குறித்து சிந்திக்கத் தயாராக இல்லை. இந்நிலை யில் மக்களின் உண்மையான எதிர்காலம் குறித்து ஜனநாயக சக்திகளே குரல் கொடுக்க வேண்டும்.

எனவே நாட்டில் வாழும் சிறுபான்மை இனங்களின் ஜனநாயக உரிமைகள் பேணப்பட வேண்டுமாயின் அங்கு ஓர் ஜனநாயக சூழலை முதலில் ஏற்படுத்த வேண்டும். குழு நலன்களாக ஆரம்பித்து தற்போது வர்க்க நலனாக மாறியுள்ள தமிழ்த் தேசியக் கோரிக் கைகளின் பரிமாணங்களின் உள்ளார்ந்த வடிவங் களின் நோக்கங்களின் உண்மைகள் மக்கள் முன் வைக்கப்பட வேண்டுமெனில் அங்கு ஜனநாயகச் சூழல் தேவையாகிறது.

தமிழ் ஈழம், அதிகாரம் தமது கையில் என்ற போக்கு களுக்கு எதிராக மக்கள் தெளிவான விதத்தில் தமது எதிர்ப்பை முன்வைக்கவேண்டும். சமாதானம், பன்மைத் துவ ஜனநாயகம், மனித உரிமை எனப்படும் சர்வதேசக் கோட்பாடுகள் புதிய மாற்றத்திற்கான அடிப்படை களாக அமைதல் வேண்டும். தேசம் தழுவிய ஜனநாயக மாற்றம் ஒன்றிற்கான வேலைத்திட்டம் ஒன்றின் மூலமே சிறுபான்மை இனங்களின் அடிப்படை உரிமைகளையும் பாதுகாப்பையும் உறுதி செய்ய முடியும். இதற்கான மாற்றங்கள் நாடு தழுவிய ரீதியில் ஏற்பட்டு வரும் இச்சூழலில் இவற்றைப் பலப்படுத்தி புதிய மாற்றத்தை துரிதப்படுத்த சகல சிறுபான்மை இனங்களும் அதில் இணைவதே பொருத்தமானது.